பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
08 12 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்வதேச அளவில் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதில் யுனஸ்கோ முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களவையில் இன்று சிறப்பு விவாதம் நடைபெற உள்ளது.

- தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.எட்., மாணவர்கள் செமஸ்டர் தேர்வுகளை மாநிலத்திற்குள்ளேயே எழுதும் வகையில் தேர்வு மையங்களை ஏற்பாடு செய்யுமாறு மத்திய அரசை திமுக வலியுறுத்தியுள்ளது.

- தமிழகத்தின் மீது அக்கறை கொண்டு மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச அளவில் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதில் யுனஸ்கோ முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் யுனஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பிற்கான அரசுகளுக்கு இடையேயான குழுவின் கூட்டத்தில் வெளியிட்ட உரையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் உணர்வுபூர்வமான நினைவுகளை பாரம்பரியம் பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பாரம்பரிய அறிவினை புத்தகங்கள் வாயிலாக மட்டுமே அறிந்துகொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவை பொறுத்தவரை பாரம்பரியம் என்பது நினைவலைகள் மட்டும் அல்ல என்றும், உயிரோட்டம் உள்ள நதியாக அது திகழ்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கலாச்சார வேர்களை அழிக்காமல் நகரமயமாக்கல் மற்றும் நவீன மயமாக்கல் பணிகளை மேற்கொள்வதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களவையில் இன்று சிறப்பு விவாதம் நடைபெற உள்ளது.

இந்த விவாத்தை பிரதமர் திரு. நரேந்தி மோடி தொடங்கி வைக்க உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

நண்பகல் 12 மணிக்கு தொடங்கும் விவாதம் 10 மணி நேரம் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வந்தே மாதரம் குறித்த விவாதம் இன்றும், தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதம் நாளையும் நடத்த முடிவு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்கள் உலக அளவில் போட்டிபோட வேண்டுமானால், ஆராய்ச்சியிலும், மேம்பாட்டிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் இந்திய சர்வதேச அறிவியல் விழாவில் தொழில்முனைவோர் மற்றும் மாணவர்களுடன் நேற்று அவர் கலந்துரையாடியபோது இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய உந்து சக்தியாக புத்தொழில் நிறுவனங்கள் திகழும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் அறிவியல் கல்விக்கான வாய்ப்புகள் பெருகி இருப்பதாகவும், இதனால் நாடு வேகமாக முன்னேறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு அளித்து வரும் ஊக்கத்தால் சிறிய நகரங்களில் சாதாரண குடும்ப பின்னணியை சேர்ந்தவர்களும் தொழில்முனைவோராகும் நிலை உருவாகியுள்ளதாகவும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமத்தின் ஒரு பகுதியாக வட இந்திய மாணவர்களுக்கு தமிழ் மொழி கற்றுத் தரப்படுகிறது.

இதற்காக சென்னை ஐ.ஐ.டி. உருவாக்கியுள்ள வித்யாசக்தி என்ற டிஜிட்டல் தளத்தைக் கொண்டு தினமும் காலை ஒரு மணி நேரம் சுகாதார பணியாளர்கள் தேசிய மாணவர் படையினர் ஆகியோருக்கு தமிழ் கற்றுத் தரப்படுகிறது.

மாணவர்களும் எளிதாக விளக்கப் பாடங்களைப் பயன்படுத்தி தமிழை கற்று வருகிறார்கள்.

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் ஆகியவற்றில் தமிழ் மொழயின் வளர்ச்சியை காட்சிப்படுத்தும் வகையிலும் காசி தமிழ்ச் சங்கமத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

<<<<>>>>

தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.எட்., மாணவர்கள் வரும் 15, 16 ஆகிய தேதிகளில் Swayam செமஸ்டர் தேர்வுகளை மாநிலத்திற்குள்ளேயே எழுதும் வகையில் தேர்வு மையங்களை ஏற்பாடு செய்யுமாறு மத்திய அரசை திமுக கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் சார்பில் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட மாநிலத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் தமிழ்நாட்டிற்குள்ளேயே தேர்வு மையத்தை தேர்ந்தெடுத்தபோதிலும் கர்நாடகா மற்றும் கேரளாவில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுவதாகவும், மாநிலத்திற்குள்ளேயே தேர்வு மையங்களை ஏற்படுத்தி தருமாறும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் மீது அக்கறை கொண்டு மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 23 ஆயிரம் வீடுகளை மத்திய அரசு கட்டித் தந்துள்ளதாக கூறினார்.

33 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும், ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காசி தமிழ்ச் சங்கத்தை தொடர்ந்து நடத்துவதன் மூலம் தமிழ் மொழியை வட இந்திய மக்கள் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

சேலம் மாவட்டத்தில் வினியோகிக்கப்பட்ட படிவங்களை சேகரிக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளதாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தெரிவித்தனர்.

(Voice Byte - BLO's - 46 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

## இருவரிச் செய்திகள்

தைவான் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Pete Hegseth தெரிவித்துள்ளார்.

--------------

பாகிஸ்தானின் வர்த்தக நகரமான கராச்சியில் நேற்று நடைபெற்ற பேரணியின்போது வன்முறை ஏற்பட்டதால் 45 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

--------------

மத்தியப்பிரதேச மாநிலத்தில் செயல்பட்டு வரும் நக்சல் தீவிரவாதிகள் காவல்துறையிடம் சரணடைய வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

கோவா தீ விபத்தில் காயமடைந்த 5 பேர் விரைவாக குணமடைந்து வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. Yatindra Maralkar தெரிவித்துள்ளார்.

--------------

ஸ்ரீநகரில் வர்த்தக நிறுவனங்கள் அதிகமாக உள்ள முன்வாராபாத் பகுதியில் நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்தில் ஏராளமான கடைகள் தீயில் சேதமடைந்துள்ளன.

--------------

நாகர்கோவிலில் 49 புதிய மகளிர் விடியல் பேருந்துகளை மாநில அமைச்சர் திரு. மனோதங்கராஜ் நேற்று தொடங்கி வைத்தார்.

--------------

பொங்கல் பண்டிகையின்போது நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு ஆன்லைன் மூலம் டோக்கன் வழங்கும் நடைமுறையை ரத்து செய்ய வேண்டும் என்று திண்டுக்கலைச் சேர்ந்த மாடுபிடி வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

--------------

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு மைசூரு - தூத்துக்குடி இடையே சேலம் - மதுரை வழியாக வரும் 23 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

--------------

சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி கோவிலுக்கும் வருகை தருவதால் பக்தர்களின் கூட்டம் அதிகரித்துள்ளது.

--------------

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் கும்பாபிஷேகம் இன்று நடைபெற உள்ளது.

--------------

சென்னையில் நேற்று வரை 49 ஆயிரத்து 347 செல்லப்பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி அறிவித்துள்ளது.

--------------

சென்னை மெரினா கடற்கரையில் மாநகராட்சி சார்பில் நேற்று நடைபெற்ற பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

--------------

## விளையாட்டுச் செய்திகள்

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கேப்டவுடனில் நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் துவக்கம் முதலே இந்தியா ஆதிக்கம் செலுத்தியது.

இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி இன்றிரவு மணி 8.30க்கு நடைபெற உள்ளது.

----------------

சூப்பர் கோப்பை கால்பந்துப் போட்டியின் சாம்பியன் பட்டத்தை 3வது முறையாக கோவா வென்றுள்ளது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோவா, 6-5 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

<<<<The End>>>>